<u>முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை</u>

<u>முன்னிலை திரு. பா. கௌதமன், பி.ஏ.,பி.எல்.,</u>

<u>முதன்மை சார்பு நீதிபதி</u>

ம.சா. 1 நாள் 18.03.2022

| | | | |
|---|---|---|---|
| எம்.சி.ஒ.பி.எண். | 301/2019 | | |
| பெயர் | கரிகாலன் | த/பெ. | |
| வயது | | தொழில் | |
| ஜாதி | | மதம் | |
| கிராமம் | | தாலுக்கா | |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை. குற்ற வழக்கில் காவல் நிலையத்தில் நான் புகார் கொடுத்தேன். புகாரில் அடையாளம் தெரியாத 4 சக்கரம் மோதியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். புகாரில் என்ன ரக கார் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். நான் பெட்ரோல் பங்கில் வேலை பார்கிறேன். 3ம் மனுதாரர் சுஜா ரப்பர் பேக்டிரில் வேலை பார்க்கிறார். எனது தகப்பனாரின் வருமானத்தை காட்ட கூடிய ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தொழில் வரி செலுத்திய ரசீது தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். குத்தாலம் டவுன் பஞ்சாயத்தில் கடை வைத்தவர்களுக்கு தொழில் வரி உண்டு என்றால் சரிதான். எனக்கு திருமணம் ஆகிவிட்டது. எனது தாயார் எனது வருமாணத்தில் தான் வாழ்ந்து வருகிறார் என்றால் எனது தகப்பனார் இறந்த பிறகு எனது வருமானத்தில் வாழ்ந்து வருகிறார். எனது தகப்பனார் உயிரோடு இருந்த காலம் முதல் நாங்கள் கூட்டு குடும்பமாக உள்ளோம். நான் 10 வருடங்களாக பெட்ரோல் பேங்கில் வேலை பார்கிறேன். எனது தம்பி 10 வருடங்களாக ரப்பர் பேக்டிரில் வேலை பார்க்கிறார். மனுதாரர்கள் அனைவரும் எனது தகப்பனாரின் வருமானத்தை நம்பி இல்லை என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் வாகனம் இந்த விபத்தை ஏற்படுத்தவில்லை என்றால் சரியல்ல. விபத்தை ஏற்படுத்திய வாகனத்திற்கு ஏதேனும் சேதம் இருக்கும் என்றால் சரிதான். ம சா ஆ 2ல் 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் சேதம் ஏதும் இல்லை என சொல்லபட்டுள்ளது என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர் வாகனம் எந்தவித விபத்தையும் ஏற்படுத்தவில்லை என்றால் சரியல்ல. நஷ்டஈடு பெற வேண்டும் என்பதற்காக 1ம் எதிர்மனுதாரர் வாகனம் விபத்தை ஏற்படுத்தியதாக தவறாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன்

என்றால் சரியல்ல. குற்ற வழக்கு மேற்படி காரணங்களால் இறுதி அறிக்கை தாக்கல் செய்யபடாமல் உள்ளது என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் வாகனம் விபத்தில் ஈடுபடாததால் 1ம் எதிர்மனுதாரர் நஷ்டஈடு கொடுக்க கடமைபட்டவர் அல்ல என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கு 3ம் எதிர்மனுதாரர் காப்பீடு செய்துள்ளார் என்றாலும், ஒரு வேலை 1ம் எதிர்மனுதாரர் நஷ்டஈடு கொடுக்க வேண்டும் என தீர்மானித்தால் 3ம் எதிர்மனுதாரர் தான் கொடுக்க கடமைபட்டவர் என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தை ஒட்டியதாக சொல்லும் 2ம் எதிர்மனுதாரருக்கு ஒட்டுநர் உரிமம் விபத்து காலத்தில் நிலுவையில் இருந்தது என்றால் சரிதான். ஆகையால் 1ம் எதிர்மனுதாரரை பொறுத்து வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.

<u>3ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>

காயம்பட்ட எனது தகப்பனார் 108 ஆம்புலன்ஸ் மூலமாக மயிலாடுதுறை அரசு மருத்துவ மனையில் சேர்க்கபட்டதாக சொல்வதற்கு விபத்து பதிவேடு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து பதிவேட்டை தாக்கல் செய்தால் விபத்தின் உண்மையான காரணம் தெரியவரும் என்பதால் தான் விபத்து பதிவேட்டை வேண்டும் என்றே தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. விபத்து நடந்ததாக நான் சொல்லும் இடம் குத்தாலம் பேருந்து நிலைய வாயில் என்றால் சரிதான். அந்த இடத்தில் மக்கள் கூட்டம் எப்போதும் இருக்கும் என்றாலும் சுமார் 20 கடைகள் இருக்கும் என்றாலும் சரிதான். முதல் விசாரணையில் கருணாநிதி என்பவர் விபத்தை பார்த்ததாக சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அவ்வாறு எனது மனுவிலும் முதல் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. புகாரிலும் முதல் தகவல் அறிக்கையிலும் போலீசார் விசாரணையிலும் அடையாளம் தெரியாத கார் மோதியதாக தான் சொல்லபட்டுள்ளது என்றால் சரிதான். ஆகையால் 1ம் எதிர்மனுதாரர் வாகனம் விபத்தை ஏற்படுத்ததால் 3ம் எதிர்மனுதாரா நஷ்டஈடு கொடுக்க கடமைபட்டவர் அல்ல என்றால் சரியல்ல. எனது தகப்பனாரின் வயதை காட்டும் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது தகப்பனாருக்கு 70 வயதுக்கு மேல் இருக்கும் என்றாலும் அவர் முடி திருத்தும் கடை வைத்திருக்கவில்லை என்றாலும் சரியல்ல. விபத்தை 1ம் எதிர்மனுதாரர் வாகனம் தான் ஏற்படுத்தியது என்பதை நிரூபிக்கும் கடமை என்னிடம் தான் உள்ளது என்றால் சரிதான். நானும் 3ம் மனுதாரரும் எனது தகப்பனரின் வருமானத்தை நம்பி வாழவில்லை என்றால் சரியல்ல. விபத்து சம்பந்தமாக மனுவிலும் பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லியுள்ள அனைத்து சங்கதிகளும் பொய்யானவை என்றால் சரியல்ல.

1ம் எதிர்மனுதாரர் வாகனம் ஏற்படுத்தாத விபத்திற்கு 3ம் எதிர்மனுதாரர் நஷ்டஈடு கொடுக்க கடமைபட்டவர் அல்ல என்றால் சரியல்ல.